செய்தி வெளியீடு எண்:899 நாள்:18.10.2021

## <u>செய்தி வெளியீடு</u>

### பொதுப்பணித்துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஆய்வு

---

பொதுப்பணித்துறையின் பல்வேறு திட்டங்கள், அறிவிப்புகள் ஆகியவற்றினை செயல்படுத்திய விபரம், நிலுவையிலுள்ள திட்டங்களை விரைவுப்படுத்த வேண்டியது தொடர்பாக இன்று (18.10.2021) காலையில் தலைமைச் செயலகத்தில் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் துறை சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டவை, நிலுவையிலுள்ளவையின் விபரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எடுத்துரைத்தார்கள். இந்த ஆண்டு சட்டப் பேரவையில் அறிவித்த திட்டங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டவை ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியது அனைத்தும் விபரமாக கேட்டறிந்தார்கள். இத்திட்டங்களை உடனடியாக ஆணை பிறப்பித்து பொது மக்களின் பயன்படுத்த தக்க வகையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள் இதைப்போல, மதுரையில் கட்டப்பட்டு வரும் கலைஞர் நினைவு நூலகம் மற்றும் கலைஞர் நினைவிடம் ஆகியவற்றின் பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும், இதில் எந்த பணியிலும் காலதாமதம் இருக்க கூடாது என்று அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின் போது திரு.விஸ்வநாத் முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் திரு.ராமச்சந்திரன், தலைமைக் கட்டிட கலைஞர் திரு.மைக்கேல், துணை தலைமைப் பொறியாளர் திரு.இளஞ்செழியன் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் திரு.கல்யாண சுந்தரம் ஆகியோர் பங்குப் பெற்றனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை– 9